2026 – பிப்ரவரி மாதம் 19–ஆம் தேதி வியாழக்கிழமை.
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 121/2025*

*2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 – ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. K. மனோரஞ்சிதம் Gr.II Bench Clerk அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | PW1, ராஜா |
| தந்தையார் பெயர் | : | சந்தனகிரி |
| ஊர் | : | எறையூர் |
| வட்டம் | : | வேப்பந்தட்டை |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | வியாபாரம் |
| வயது | : | 50 |

<u>தேதி: **19.02.2026**</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பில் ம.சா.1 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்படும் பின்வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

**<u>எனது சார்பாக:–</u>**

1). 28.03.2025–ஆம் தேதி பெரம்பலூர் அரசு மருத்துவமனை பணிமருத்துவர் என்னை திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்த சீட்டை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

2). 12.04.2025–ஆம் தேதி பெரம்பலூர் அரசு மருத்துவமனையால் வழங்கப்பட்ட காயச்சான்றிதழின் உண்மை நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

3). 23.03.2025–ஆம் தேதி பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட CT ஸ்கேன் ரிப்போர்ட்டைத் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

4). 23.03.2025–ஆம் தேதி பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் CT ஸ்கேன் எடுக்கப்பட்டதற்கான ரசீதுகளின் அசலைத் (எண்ணிக்கை 3, தொகை ரூ.1500/– ) தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

5). எனது ஓட்டுநர் உரிமத்தின் அசலுடன் ஒப்பீடு செய்த நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

( மேற்படி ம.சா.ஆ.4 சான்றாவணம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் விபத்தின் போது ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையும் அதன் காப்பீட்டு நிறுவனத்தையும் இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளதால் நான் வியாபாரத்திற்கு செல்லவில்லை. விபத்தன்று நான் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து ஆத்தூர் – பெரம்பலூர் கிழமேல் சாலையில் நடைபெற்றது என்றால் சரி. நான் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தேன். பேருந்து எனக்கு பின்னால் வந்து கொண்டிருந்தது. மருத்துவமனை செல்வதற்கு மேற்படி சாலையில் தென்புறம் உள்ள பிரிவு சாலைக்கு வலது

பக்கமாக திரும்பி செல்ல வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு நான் வலதுபுறமாக திரும்பி செல்லும் போதுதான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். நான் எனக்கு பின்னால் வந்த பேருந்தை கவனித்து நின்று சென்றிருந்தால் விபத்து நடைபெற்றிருக்காது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது கவனக்குறைவுதான் காரணம் என்றும் பேருந்து ஓட்டுநர் எவ்விதத்திலும் காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்றும் அவை சிகிச்சையின் போதே பூரண குணமடைந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு விபத்து காயங்களால் எவ்வித வருமான இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகமானது என்றும் என்னுடைய மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/–கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**